<u>வாக்குமூலம்</u>
<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>
<u>வழக்கு எண் : SC.No. 824/2023</u>
<u>வழக்கு சாட்சி PW-1</u>

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சாஸ்தா | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுகா | : | | வயது | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of April 17th , 2025.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் கீழப்பாவூரில் குடியிருந்து வருகிறேன். நான் சென்ட்ரிங் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது நண்பர். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு கீழே விழுந்ததில் எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக தென்காசி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். இந்த வழக்கு சம்பந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து மட்டும் **அ.சா.ஆ.1**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சி பிறழ்சாட்சியாக கருதப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டதன் பேரில் குறுக்கு விசாரணை –**

நான் போலீஸ் விசாரணையில் கடந்த 18.09.2022ம் தேதி, மதியம் சுமார் 02.00 மணியளவில் பெத்தநாடார்பட்டி மாயாண்டி கோவில் அருகே

எனக்கு தரவேண்டிய பணத்தை எதிரியிடம் கேட்டேன் என்றும், அப்போது எதிரி என்னை கெட்ட வார்த்தைகளால் பேசி, உனக்கு பணம் தரணும், அதை என்னால் தர முடியாது ல. போல, என்று சொல்லி ஏசினார் என்றும், எதிரியிடம் தப்பாக பேசாதே என்று நான் சொன்னேன் என்றும், எதிரி கத்திரிக்கோலை எடுத்து "இத்தோடு செத்து தொலை" என்று சொல்லி, எனது வலது மார்பிலும், இடது கன்னத்திலும் குத்தி காயப்படுத்தினார் என்றும், சாட்சிகள் எதிரியை சத்தம் போட்டபோது, சாட்சி முருகனின் இடது நெற்றியிலும், இடது பக்க தோள்பட்டையிலும் குத்தி காயப்படுத்தினார் என்றும், கொன்று விடுவதாக மிரட்டினார் என்றும், சிகிச்சைக்காக தென்காசி அரசு மருத்துவமனைக்கு சென்றேன் என்றும், நடவடிக்கை எடுக்க புகார் வாக்குமூலம் கொடுத்தேன் என்றும் விசாரணையில் கூறிவிட்டு, தற்போது எதிரிக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

C KATHIRAVAN

Digitally signed by C KATHIRAVAN
Date: 2025.04.17 16:00:48 +0530